**கவனிக்க.-** *23.3.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1752 - 2012 මාර්තු මස 30 වැනි සිකුරාදා - 2012.03.30

*1752 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 352 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 358 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2012, ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, மாச்சு மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான ''புதிய சேர்வாளர்கள்'' ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை நிரந்தர வான்படை

அலுவலர் வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர/ தொண்டர் வான்படையில் ஆண்/ பெண் அலுவலர்களுக்கான பதவி வெற்றிடங்கள் கீழ்க்காணும் பிரிவுகளில் உள்ளன.

(அ) பரிபாலன பிரிவு
(ஆ) விமானத்தள நிர்மாணப் பிரிவு
(இ) வைத்தியப் பிரிவு
(ஈ) பல் வைத்தியப் பிரிவு

2. கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய ஆண்/பெண் இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

(அ) ***பரிபாலன பிரிவு***.- பரிபாலன அலுவலர் (ஆண்-நிரந்தர) :

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் வர்த்தகம்/ கணக்கியல்/கலைப் பிரிவுகளில் பட்டம் பெற்றிருத்தல் அல்லது அதற்குச் சமமான தகைமை பெற்றிருத்தலுடன் பரிபாலனம் என்பனவற்றில் ஒரு வருட அனுபவம் பெற்றிருத்தல் ; அல்லது

கணக்கியல் சம்பந்தப்பட்ட விசேட திறமை அல்லது ஒரு வருட அனுபவம் பெற்றிருத்தல் ; அல்லது

மாணவ பரிபாலனம் சம்பந்தப்பட்ட ஒரு வருட டிப்ளோமா பெற்றிருத்தல், பரிபாலனம், கணக்கியல் என்பனவற்றில் ஒரு வருட அனுபவம் பெற்றிருப்பதோடு குறைந்தபட்சம் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் (மேலதிக கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கணிதம்/விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச்சித்தியும் சிங்களம்/தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் ; அல்லது

கணக்கியலாளர்களின் பயிற்சியில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் பரிபாலனம், கணக்கியல் என்பனவற்றில் ஒரு வருட அனுபவம் பெற்றிருப்பதோடு குறைந்தபட்சம் க.பொ.த.(சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் (மேலதிக கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச்சித்தியும் சிங்களம்/ தமிழில் சித்தியும் பெற்றிருத்தல்.

(ஆ) ***விமானத்தள நிர்மாணிப்புப் பிரிவு***.- பொறியியலாளர் (சிவில் பொறியியலாளர்/மின்) (ஆண்/பெண்-நிரந்தர தொண்டர் படை) :

சிவில் பொறியியல்/மின் பொறியியலாளர் விஞ்ஞானத்தில் பட்டம் பெற்றிருத்தல் மற்றும் இலங்கை பொறியியலாளர் சங்கத்தில் உறுப்பினராக இருத்தல் வேண்டும். (எம்ஐஈ) அத்துடன் மூன்று (3) வருடகால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

சிவில் பொறியியல்/மின் பொறியியலாளர் விஞ்ஞானத்தில் பட்டம் பெற்றிருத்தல் மற்றும் இலங்கை பொறியியலாளர் சங்கத்தில் உறுப்பினராக இருத்தல் வேண்டும். (எம்ஐஈ) அல்லது

பல்கலைக்கழக சபையில் ஏற்றுக்கொள்ளப்படும் பல்கலைக் கழக சிவில் பொறியியல், மின் பொறியியல் விஞ்ஞானத்தில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் இலங்கை பொறியியலாளர் சங்கத்தில் உறுப்பினராக இருத்தல் (ஏஎம்ஐஈ) அல்லது

சிவில் பொறியியல்/மின் பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய தொழினுட்ப டிப்ளோமா (என்டீடி/என்டீஈஎஸ்/எச்என்டீஈ) பெற்றிருத்தல் அல்லது திறந்த பல்கலைக்கழகமொன்றில் சிவில் பொறியியல் மின் டிப்ளோமா பெற்றிருத்தல் மற்றும் மூன்று (3) வருட கால அனுபவம் உள்ள விண்ணப்பதாரி களுக்கு இதற்காக விண்ணப்பிக்கலாம்.

வாஸ்த்து விஞ்ஞானம் (ஆண்/பெண்-நிரந்தர தொண்டர்) :

பி ஆர்ச் பட்டமுடன் திறமை கொண்டிருத்தல் அல்லது பிஎஸ்சி (பிஈ) பட்டம், எம்எஸ்சி (ஆர்ச்) பட்டம் பெற்றிருத்தல் அல்லது

பி ஆர்ச் பட்டம் அல்லது பிஎஸ்சி (பீஈ) பட்டம் பெற்றிருத்தல்.

அளவு அளவை அலுவலர் (ஆண்/பெண்-நிரந்தர தொண்டர்) :

பிஎஸ்சி (கியூஎஸ்) பட்டம் மற்றும் இலங்கை அளவையாளர் நிறுவனத்தில் அங்கத்துவம் பெற்றிருத்தல் வேண்டும். (கிறஜுவேட் மெம்பர்), இலங்கை அளவையாளர்களின் நிறுவனத்தில் அங்கத்துவம் பெற்றிருத்தல் வேண்டும் (டெக்னிகல் நம்பர்) (1) வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அளவையாளர்-ஆண் (நிரந்தர தொண்டர்) :

அளவையாளர் விஞ்ஞானத்தில் பட்டம் பெற்றிருத்தல் ; அல்லது

தியத்தலாவ அளவு மற்றும் வரைபட நிறுவனத்தில் டிப்ளோமா பெற்றிருத்தல் அல்லது மூன்று (3) வருடகால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**கவனத்திற்கு :**

(1) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் அக்குரே கொட, பத்தரமுல்லையில் உள்ள பாதுகாப்பு மத்தியஸ்தானத்தில் பிரதானமாக சேவையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

(2) தொழிற்துறையில் கொண்டுள்ள திறமை மற்றும் மாடி வீடு துறைகளில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(இ) ***வைத்தியப் பிரிவு***.- வைத்திய அலுவலர்-ஆண்/பெண் (நிரந்தர தொண்டர்) ப்ளைட் லெப்டினன்ட் :

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் வைத்திய (எம்பிபிஎஸ்) பட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமை இருப்பது மற்றும் வைத்திய சபையில் பதிவாகியிருத்தல் வேண்டும்.

(ஈ) ***பல் வைத்தியப் பிரிவு***.- *பல் வைத்திய அலுவலர்-ஆண்/பெண் (நிரந்தர தொண்டர்) ப்ளைட் லெப்டினன்ட் :*

*அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் வைத்திய பல் வைத்திய (பிடிஎஸ்) பட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமை இருப்பது மற்றும் வைத்திய சபையில் பதிவாகியிருத்தல் வேண்டும்.*

*பல் வைத்திய மாணவர்-ஆண்/பெண் (நிரந்தர) ப்ளைட் ஒபீசர் :*

*(பிடிஎஸ்) இரண்டாம் பகுதியை முடித்து தற்போது மூன்றாம் வருட பல் வைத்திய (பிடிஎஸ்) பட்டத்திற்கு படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு இதற்காக விண்ணப்பிக்கலாம்.*

*ப்ளையிங் ஒபீசர் :*

*இறுதி (பிடிஎஸ்) முதலாம் பகுதியை முடித்து தற்போது இறுதி வருட பல் வைத்திய (பிடிஎஸ்) பட்டத்திற்கு படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு இதற்காக விண்ணப்பிக்கலாம்.*

**கவனத்திற்கு :**

(1) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் ப்ளைட் லெப்டினன்ட் நிலையில் நிரந்தர அலுவலராக தேர்ந்தெடுக்கப்படுவதோடு அவர்கள் அன்றிலிருந்து பத்து வருடங்கள் கட்டாய சேவையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

(2) தேர்ந்தெடுக்கப்படும் பல் வைத்திய மாணவர்கள் இறுதி வருடம் முடியும்வரை வான் படையிலிருந்து விடுவிக்கப்படுவார்கள். பல் வைத்திய (பிடீஎஸ்) பட்டத்தினை முடித்த பின்னும் வைத்திய சபையில் பதிவாகியதும் அவர்கள் ப்ளைட் லெப்டினன்ட் நிலையில் நிரந்தரப்படுவார்கள்.

(3) கல்வி தொழிற்பாடுகளுக்கு சந்தர்ப்பம் தரப்படும்.

(4) பல் வைத்திய மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் வருடத்தை காட்டக்கூடிய ஆவணங்களை விண்ணப்பத்துடன் அனுப்பிவைக்கவும்.

3. **வேறு தகைமைகள் :**

(அ) *தேசிய இனம்*.- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ஆ) *குடியியல் நிலை*.- விவாகமானவர்/விவாகமாகாதவர்;

(இ) *பால்*.- ஆண்/பெண் :

(ஈ) *உயரம்*.- ஆண்கள் 5 அடி 5 அங்குலமும் அதற்கு மேலும்
பெண்கள் 5 அடி 4 அங்குலமும் அதற்கு மேலும் ;

(உ) *வயது*.- 2012.05.31 ஆந் திகதிக்கு-

(1) பரிபாலனம் பல் வைத்திய.- வயது 30 இற்கு கூடாதிருத்தல் வேண்டும் ;

(2) விமானத்தள நிர்மாணப் பிரிவு.- வைத்திய/பல் வைத்திய - வயது 35 இற்கு கூடாதிருத்தல் வேண்டும் ;

(ஊ) *மார்பு*.- ஆண் 32" (குறைந்தது)

(எ) *பார்வை வர்ணப் பதிவு மட்டம்* .- CP2

(ஏ) *தொலைபார்வை*.- இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடியுடன் அல்லது மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப் படாமல்)

4. தேவையான உயரம், நிறை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்திற் கொள்ளப்படும்.

5. வான்படை தளபதியால் நியமிக்கப்படும் வைத்திய பரீட்சையில் தேர்ச்சிபெறக்கூடிய தேகாரோக்கியம் உடையவராயிருத்தல் வேண்டும்.

6. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள அதியுயர் சாதனைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

7. **அரச கரும மொழித் தேவைப்பாடுகள்**.- தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வுநாடிகள் இலங்கைக் குடியரசின் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காகவும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற அல்லது இதன் பின்னர் ஆக்கப் பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

8. தகைமைகளையும் அனுபவத்தையும் பொறுத்து தெரிவு செய்யப்படும் விண்ணபதாரிகளுக்கு இலங்கை வான்படையில் ப்ளையிங் ஒபீசர்/ப்ளைட் லெப்டினன்ட்/ஸ்குவாட்ரன் லீடர்/விங் கமாண்டர்/குரூப் கெப்டன்/எயா கொமடோர் தரத்தில் நிரந்தர/தொண்டர் ஆணைபெற்ற பதவி வழங்கப்படும்.

9. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஏவுநரினால் தீர்மானிக்கப்படும் காலங்களில் பயிற்சி பெறுவதற்கு தேவைப்படுத்தப் படுவார்கள். பயிற்சிக் காலங்களில் துர்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குள் உள்ள காரணங்களுக்காக அவர் தகுதியற்றவர் என எந்த நேரத்திலும் அதிகாரிகளினால் முறைப்பாடு செய்யப்பட்டால் அவருக்களிக்கப்பெற்ற ஆணை மீளப்பெறுவதற்கு அவர் ஆளாதல் வேண்டும். அத்துடன் அல்லது இலங்கை வான்படை ஒழுக்காற்று ஒழுங்குவிதிகளுக்கிணங்க வேறு ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் அமைந்தவராதல் வேண்டும்.

10. வான்படை அலுவலர்கள் வான்படைச் சட்டத்தினாலும் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் கட்டளைகளினாலும் ஆளப்படுகிறார்கள்.

11. இலங்கை வான்படை ஆணைபெற்ற அலுவலர் ஒருவரின் சேவை நிபந்தனைகள் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1951 ஆம் ஆண்டு ஏப்பிறல் 27 ஆந் திகதிய 10240 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை வான்படை (நிரந்தர அத்துடன் நிரந்தர உப சேவை) ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி "அலுவலர் ஒருவருக்கு பைலற் ஒபிசர் அல்லது ஏற்புடைத்தாயின் அதைவிட உயர்ந்த தரத்தில் நிரந்தர ஆணைபெற்ற பதவி வழங்கப்படும். வான்படைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் நியதிகளின்படி அலுவலர் ஒவ்வொருவரும் சனாதிபதி விரும்பும் வரைக்குமே தமது நியமனத்தை வைத்திருத்தல் வேண்டும்." ஆயின் ஒருதலைப்பட்சமாக தமது ஆணைபெற்ற பதவியிலிருந்து விலகுவதற்கான உரிமை எதுவும் அலுவலர் ஒருவருக்குக் கிடையாது. ஆனால் வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அலுவலர் பதவியிலிருந்து விலகுவது சனாதிபதியினால் அனுமதியளிக்கப்படலாம். பயிற்சி மற்றும் அதைத் தொடர்ந்த கற்கைநெறிகள் தொடர்பிலான கட்டாய சேவைக்காலத்தைக் குறிக்கின்ற ஏதேனும் உடன்படிக்கை

செய்திருப்பின் மேலே கூறப்பட்ட வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அனுமதிக்கப்படமாட்டா. வான்படையிலிருந்து ஓய்வு பெறுவது வான்படை ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள் சட்டக் கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் கீழ் 10 ஆண்டுகள் சேவைக்குப்பின் ஏற்புடையதாகும்.

12. அலுவலர் ஒருவர் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக எந்த நேரத்திலும் உலகத்தின் எப்பாகத்திற்கும் அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

13. திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

14. திருமணமான அலுவலர் ஒருவருக்கு கிடைக்கக்கூடியதாக இருந்தால் விவாகமானவர்களுக்கான மனை ஒன்று வழங்கப்படும். வாடகை அறவிடுதல் பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தானவாறு இருக்கும். விவாகமானவர்களுக்கான மனைகளில் வசிக்காத விவாகமான அலுவலர்கள் 15 (ஆ) (17) ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ள வாறான வாடகைப்படிக்கு உரித்துடையவர்களாவார்கள்.

15. (அ) இலங்கை வான்படையில் ஆணைபெற்ற அலுவலர்களுக் கான சம்பளம் பின்வருமாறு (ஆண்டொன்றுக்கு) :-

| | |
|---|---|
| ப்ளையிட் ஒபீசர் | - ரூபா 2,29,200 ஆண்டொன்றுக்கு |
| ப்ளையிங் ஒபீசர் | - ரூபா 2,75,220-34 x 7,740 = ரூபா 5,38,380 |
| ப்ளைற் லெப்டினன்ட் | - ரூபா 3,21,660-28 x 7,740 = ரூபா 5,38,380 |
| ஸ்குவாட்ரன் லீடர் | - ரூபா 3,52,620-24 x 7,740 = ரூபா 5,38,380 |
| விங் கமாண்டர் | - ரூபா 3,62,100-20 x 9480 = ரூபா 5,51,700 |
| குறூப் கப்ரன்- | - ரூபா 4,41,060-18 x 12,600 = ரூபா 6,67,860 |

(ஆ) வைத்திய அதிகாரிகளுக்கான கொடுப்பனவுகள் (ஆண்டொன் றுக்கு) :-

| | |
|---|---|
| ஆரம்பப் பிரிவு | - ரூபா 3,13,920-2 x 7,740 = ரூபா 3,29,400 |
| தரம் II | - ரூபா 3,37,140-8 x 7,800 = ரூபா 3,99,540 |
| தரம் I | - ரூபா 4,12,140-15 x 12,600 = ரூபா 6,01,140 |
| விசேட பிரிவு | - ரூபா 5,08,680-12 x 15,720 = ரூபா 6,97,320 |

(இ) வைத்திய அதிகாரிகளுக்கான வேறு கொடுப்பனவுகள் (மாதமொன்றுக்கு) :

(1) ஓய்வூதியக் கொடுப்பனவு (மாதமொன்றுக்கு) :

| | |
|---|---|
| ஆரம்பப் பிரிவு | - ரூபா 1,700 |
| தரம் II | - ரூபா 1,700 |
| தரம் I | - ரூபா 3,400 |
| விசேட பிரிவு | - ரூபா 3,400 |

(2) ஓய்வூதியம் அல்லாத கொடுப்பனவு (மாதமொன்றுக்கு) :

| | |
|---|---|
| ஆரம்பப் பிரிவு | - ரூபா 2,125 |
| தரம் II | - ரூபா 1,700 |
| தரம் I | - ரூபா 400 |

(4) மேலதிக வேலை கொடுப்பனவுகள் :

| | |
|---|---|
| ஆரம்பப் பிரிவு | - ரூபா 210 மணித்தியாலத்திற்கு |
| தரம் II | - ரூபா 280 மணித்தியாலத்திற்கு |
| தரம் I | - ரூபா 300 மணித்தியாலத்திற்கு |
| விசேட பிரிவு | - ரூபா 350 மணித்தியாலத்திற்கு |

(5) தேவையைப் பொருத்து பந்தி 15 (ஈ) உள்ள சேவை கொடுப்பனவு வழங்கப்படும்.

(ஈ) **சேவைக் கொடுப்பனவுகள் :**

(1) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா 5,850 ;

(2) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250 ;

(3) கடினப்படி மாதமொன்றுக்கு ரூபா 600 ;

(4) விசேட கொடுப்பனவு யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர் களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 5,000 ;

(5) விசேட கொடுப்பனவு ரூபா 3,000 (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 100 வீதம்) ;

(6) மேலதிகக் கொடுப்பனவு (மாதமொன்றுக்கு 1,000) ;

(7) சீருடை பேணுதல் கொடுப்பனவு (மாதமொன்றுக்கு ரூபா 255) ;

(8) சேவையாளர் கொடுப்பனவு : மாதமொன்றுக்கு ரூபா 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) ;

(9) உணவுக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 13,861.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) ;

(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை) ;

(11) அடிப்படைப் படியில் 10% விசேட கொடுப்பனவாக தரப்படும் ;

(12) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும், மனைவிக்கும், பிள்ளை களுக்கும்) ;

(13) அதிகாரி விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப் பத்திரம் அல்லது வசு வண்டிக் கட்டணச் செலவு மீளளிப்பு ;

(14) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும் ;

(15) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடைத்தாயின் குடும்பத்தின ருக்கும்) ;

(16) திருமணமான அலுவலருக்கு (வெளியிலிருந்து வசிக்க அனுமதிபெற்றிருந்தால்) மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து 30 மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப் பயணம் செய்வதற்கு இ. போ. ச. இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும்.

(17) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமண மான அலுவலர்களுக்குப் (பைலற் ஆபீசர் இலிருந்து குறூப் கப்ரன் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு ரூபா 1,850 இலிருந்து ரூபா 4,250 வரை) வாடகைப்படிகள் கொடுபடற் பாலனவாகும்.

(18) சேவைக் கொடுப்பனவு ரூபா 300, ரூபா 400, ரூபா 500. (வைத்தியர்களுக்கு முடிவுற்ற சேவைக்காலத்தைப் பொறுத்து).

(19) மேலதிக கொடுப்பனவு ரூபா 1,500 (வைத்தியர்களுக்கு மாத்திரம்).

(20) 1/ 20 கொடுப்பனவு, மாதமொன்றுக்கு - ஆரம்பச் சம்பளம் x 1/20 x 3 நாட்கள் மட்டும். (வைத்தியர்களுக்கு மாத்திரம்).

16. ஓய்வூதியங்கள்/பணிக்கொடுப்பனவுகள் என்பன காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டக்கோவையின் நியதிகளின்படி செலுத்தப்படு மாகும். வான்படை அலுவலர் அனைவரும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர் களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

17. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்**.- (அ) விண் ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக தமது சொந்த கையெழுத்தால் நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் 2012.04.05 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணிக்கு முன் "பிரதம ஆட்சேர்ப்பு அலுவலர், இலங்கை விமானப்படை, ஏக்கலை, கொட்டுகொடை" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத் தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "அரசாணையமர்வு அலுவலர் களுக்கான விண்ணப்பம் - ..................... பிரிவு" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் திகதியின் பின்னர் இலங்கை, ஏக்கலை, கொட்டுகொடை வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில் /கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் /சபையின்/குடியியல் தாபனத்தின் தலைமை யலுவலர்கள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப் பங்கள், விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை அனுப்புதல் வேண்டும் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் ;

(2) விண்ணப்பித்த பிரிவுக்கு தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ் ;

(3) விண்ணப்பத்தாரரை நன்கு அறிந்தவரான பொறுப்புவாய்ந்த இருவரிடம் இருந்து அண்மையில் பெற்ற இரு குணநலச் சான்றிதழ்கள் ;

(4) விளையாட்டுத்துறைகள் பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள்.

(5) விண்ணப்பதாரருக்கு உரித்தான வேறு சான்றிதழ்கள்.

* **குறிப்பு**.- சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் விண்ணப்ப தாரிகள் முதலாம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படும்பொழுது கட்டாயமாகக் வைத்திருத்தல் வேண்டும்.

18. விண்ணப்பத்தில் கூற்று எதுவும் பிழையானதெனக் காணப்படு மிடத்து, தெரிவுசெய்யப்படுமுன் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்ப தாரரைத் தகைமையற்றவராக்கும். அத்துடன் தெரிவுசெய்யப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

19. **தெரிவுசெய்தல் நேர்முகப்பரீட்சை முதலியன**.- (அ) மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனையைப் பூர்த்திசெய்பவர்களுள் இருந்து மட்டும் முதனிலை நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஏவுநரின் பணிப்பிற் கிணங்க வைத்திய சோதனைக்கு உட்படுத்தப்படுவர். இதில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட தெரிவுச்சபையொன்றினால் இறுதித் தேர்வு நடாத்தப் படும்.-

(ஆ) நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் இறுதி தெரிவு செய்யப்படும் நபர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்படும் இடம், நேரம், திகதி ஆகியன பற்றி எழுத்தில் அறிவிக்கப்படும். இது தொடர்பாக எதுவித பயணச் செலவோ அல்லது வேறு செலவோ வழங்கப்பட மாட்டா.

(இ) விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும் ;

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்ட விண் ணப்பதாரிகள் வைத்திய சபையொன்றினால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் ;

(உ) ஒரு தேர்வுநாடியைச் சிபார்சு செய்ய விரும்புவோர் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பகாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(ஊ) நிராகரிக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

எச். டி. அபேவிக்ரம,
எயார் மார்ஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிரந்தர/தொண்டர் வான்படையில் .................. பிரிவில் அலுவலர் பதவி**

1. தேசிய இனம் :----.
(இலங்கைப் பிரஜையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா பதிவுமுறையாயின் சான்றிதழின் இலக்கமும் திகதியும் குறிப்பிடுக.)

2. முழுப்பெயர் :----.
(தேசிய ஆளடையாள அட்டையில் உள்ளவாறு)

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.

4. விண்ணப்பிக்கும் துறை :----.

5. விண்ணப்பிக்கும் பிரிவு :----.

6. நிரந்தர முகவரி :----.

7. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிசு நிலையம் :----.

8. அஞ்சல் முகவரி :----.

9. பிறந்த திகதி :----.

10. உயரம் :----.

11. மாவட்டம் :----.

12. தேர்தற் தொகுதி :----.

13. கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.

14. தொலைபேசி இலக்கம் :----.

15. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? :----.

16. பாடசாலை அத்துடன் / அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் : ----.

| பாடசாலை/ சர்வகலாசாலை பெயர்கள் | பரீட்சையின் தன்மை | ஆண்டு | சித்தியடைந்த பாடங்கள் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.)<br>க.பொ.த. (உ.த.)<br>தொழில் தகைமைகள்<br>வேறு | | |

17. பாடசாலை/ பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

18. பெற்றோர் பற்றிய விபரங்கள் :-

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

19. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----.

20. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் :----.
(குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக) :----.

21. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும் சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) :----.

22. இதற்கு முன் ஆயுதப் படையில், தொண்டர் படையில், பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை : ----.

23. இலங்கை வான்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தீரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக :----.

24. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டவராயின் அல்லது பிணையில் விடப்பட்டவராயின் விபரங்கள் தருக :----.

25. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/ சபையில்/ கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி/ தேசிய வங்கி/ பல்கலைக்கழகங்கள்/ அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :----.

26. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :-

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

27. **விண்ணப்பதாரர் கைச்சாத்திடவேண்டிய வெளிப்படுத் துகை.**- மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் என் அறிவிற்கும் விசுவாசத்துக்கும் சரியானவை என என் மீது ஆணையாக உறுதிமொழிகிறேன். இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படையினருக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

3-1099

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - புத்தளம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2012, சித்திரை மாதம் 30 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2012, பங்குனி 13.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| புத்தளம் | வென்னப்புவ | கம்மல்பத்துவ பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் பிற்றிகல் கோரளை தெற்குப் பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், புத்தளம் |

3-1107

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்

### இலங்கை தொழில்நுட்ப சேவையின் II வகுப்பு "ஆ" தொகுதியின் பொறியியல் உதவியாளர் பதவிக்கு சேர்த்துக்கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை - 2012

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தில் இலங்கை தொழில்நுட்ப சேவையின் II வகுப்பு "ஆ" தொகுதியில் பொறியியல் உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு இந்த அறிவித்தலில் காணப்படும் தகைமைகளையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப் படுகின்றது.

1. சேர்த்துக்கொள்ளப்படும் பதவிகளின் எண்ணிக்கை 3 ஆகும்.

2. **சேவை நிபந்தனை.**- அரச சேவையில் நியமனத்தை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளினதும், இங்கு கீழ்க்குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் பொறியியல் உதவியாளர் II வகுப்பு "ஆ" தொகுதியின் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் :-

2.1 தேர்ந்தெடுக்கப்படும் அலுவலர் நாட்டின் எப்பாகத்திலும் சேவை செய்யும் நிபந்தனையின்கீழ் அமர்த்தப்படுவர்.

2.2 நியமனம் 3 வருடங்களுக்கு தகுதிகாண் காலத்தின்கீழ் மேற்கொள்ளப்படும். தற்பொழுது அரச சேவையில் நிரந்தர மாக்கப்பட்டுள்ள அலுவலர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படின், ஒரு வருட பரிசீலனை கால எல்லையின்கீழ் மேற்கொள்ளப் படும்.

2.3 நியமனத்தை நிரந்தரமாக்குவதற்கு, நியமனத் திகதி முதல் மூன்றாவது வேதன ஏற்றத்தைப் பெறுவதற்கு முன்னர் முதலாவது வினைத்திறன்காண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

2.4 பதவியில் இணைந்துகொண்ட பின்னர் 5 வருடங்களுக்குள் 2007.05.28 ஆந் திகதிய 07/2007 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி இரண்டாவது அரச மொழித்தேர்வு பெறல் வேண்டும்.

2.5 நியமனம் பெறும் அலுவலர் அரச சேவை ஆணைக்குழுவின் சட்டத்துக்கும் நிறுவனக் கோவையின் நியதிகளுக்கும், நிதி ஒழுங்குவிதிக்கும், அரசினால் அவ்வப்போது வழங்கப்படும் நிபந்தனை மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைச்சு மற்றும் திணைக்களத்தின் ஒழுங்குவிதிகளுக்கும் அமைதல் வேண்டும்.

3. **சம்பளத் திட்டம்.**- பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 (IV) மற்றும் 07/2008 இற்கு அமைவான சம்பள முறை எம்என்-3-2006-ஏ ரூபா 15,005-4X180-6X240-11X320-20X360 ரூபா 27,885 ஆக மாதாந்த சம்பளத்திற்கு உரித்துடையதாகும்.

4. **வயதெல்லை :**

4.1 விண்ணப்பம் கையேற்கும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்போது அரச சேவையில் உள்ள அலுவலர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதன்று.

4.2 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

4.3 உள மற்றும் சிறந்த தேகாரோக்கியம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

5. **கல்வித் தகைமை :**

5.1 சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடன் மேலும் பாடத்தில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

5.2 தூயகணிதம், வர்த்தக கணிதம், இணை கணிதம், பௌதீக வியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் இரு பாடங்கள் உட்பட விஞ்ஞான பாடங்கள் மூன்றில் (சாதாரண பொது பரீட்சை தவிர்ந்த) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே தடவையில் சித்திபெற்றிருத்தல். (பழைய பாடத்திட்டத்தின்கீழ் மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்திபெற்றிருத்தல் போதுமானதாகும்.)

5.3 அரச கடமை விடயத் துறையுடன் தொடர்பான அருஞ்செயல் புரியும் EXCEL மற்றும் Auto CAD பயன்படுத்துவது சம்பந்தமான இடைநிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடநெறி ஒன்றைப் பயின்று இருத்தல்.

6. **தொழிற்தகைமை.**- மேற்குறிப்பிட்ட 5 இன் அடிப்படை கல்வித் தகைமைகளுடன்கீழ் குறிப்பிடப்படும் தொழில்நுட்ப தகைமைகளில் ஒன்றில் தகைமை பெற்றிருத்தல் வேண்டும் :

6.1 மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா ;

6.2 தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ட பயிற்சி வழங்கும் அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா ;

6.3 கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா ;

6.4 திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா ;

6.5 இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியலாளர் பரீட்சையில் முதலாவது பகுதியில் தோற்றி வெற்றிகரமாக நிறைவுசெய்திருத்தல் ;

6.6 மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்குச் சமமான இலங்கை தொழில்நுட்ப சேவை சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு தகைமைகள்.

7. **சேர்த்துக்கொள்ளும் முறை**.- அடிப்படை தகைமைகளை நிறைவுசெய்துள்ள விண்ணப்பதாரர் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தினால் நடாத்தப்படும் பொது போட்டிப் பரீட்சையில் தோற்ற வேண்டும்.

பொது போட்டிப் பரீட்சையில் குறிப்பிட்ட வினாத்தாளிலும் 40% அல்லது அதற்குக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன், புள்ளிகளைப் பெற்ற தொடர் முறைக்கு அமையவே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. எனினும் தகைமைகளை நிறைவுசெய்துள்ள விண்ணப்பதாரர்கள் பரீட்சையில் பெற்ற மொத்த புள்ளிகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

8. **பரீட்சை** :

8.1 2012, ஏப்பிறல் மாத இறுதியில் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ பணிப்பாளர் நாயகத்தினால் இத்திணைக்களத்தில் இப்பரீட்சை நடாத்தப்படும்.

8.2 இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

8.3 அபேட்சகர்கள் தாம் விரும்பும் மொழியிலேயே பரீட்சைக்குத் தோற்றலாம். விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்ற முடியாது.

8.4 பரீட்சைக் கட்டணம் ரூபா 500 ஆகும்.
கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு விநியோகிக்கப்பட்ட, மாளிகாவத்தை அஞ்சல் அலுவலகத்தில் பணமாக்கக்கூடியவாறு பெற்றுக்கொள்ளப்பட்ட காசுக் கட்டளையை விண்ணப்பப்படிவத்தில் அதற்கென உள்ள உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும்.

8.5 பரீட்சைப் பாடங்கள் : பரீட்சை இரு வினாத்தாள்களைக் கொண்டதாக இருக்கும் :

(i) நுண்ணறிவு ;
(ii) விளக்கம்.

8.6 பாடத்திட்டம் :

(1) நுண்ணறிவு (காலம் : 1 மணி நேரம்)
- 100 புள்ளிகள்.

சொற்கள், எண்கள் மற்றும் உருவங்கள் ஊடாக சமர்ப்பிக்கப்படும் பிரச்சினைகள் சம்பந்தமாக விண்ணப்பதாரியின் முடிவு, சிந்திக்கும் ஆற்றல், நிவர்த்தி செய்யும் ஆற்றல், ஆய்வு செய்தல் மற்றும் தீர்மானம் எடுக்கும் ஆற்றல்.

(2) விளக்கம் (காலம் : 1 மணி நேரம்)
- 100 புள்ளிகள்.

மொழி விளக்கம் மற்றும் ஓரளவு சிக்கலான பந்தியொன்று, கடிதம் ஒன்று அல்லது மசோதா ஒன்றைப் புரிந்துகொள்ளல் மற்றும் அதிலுள்ள எண்ணக்கருத்தை தன் மொழி நடைமுறையில் சுருக்கித் தெளிவாக மற்றும் சரியாகக் கூறல்.

9. **விண்ணப்பம் அனுப்பும் முறை** :

9.1 இந்த அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய ஏ4 அளவுடைய தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி, முதற்பக்கத்தில் 1 இலிருந்து 5 வரையும் எஞ்சிய பகுதியை மறுபக்கத்திலும் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் 2012, ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ, ''கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ பணிப்பாளர் நாயகம், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூளவள முகாமைத்துவ திணைக்களம், 4 ஆம் மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10'' எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலமாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை உள்ளடக்கியிருக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை தொழில்நுட்ப சேவையின் II வகுப்பு ''ஆ'' தொகுதியின் பொறியியல் உதவியாளர் பதவிக்கு சேர்த்துக்கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை'' எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

**குறிப்பு**.- அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரியாயின், தமது திணைக்கள/நிறுவனத் தலைவரின் ஊடாக விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

9.2 சகல விதங்களிலும் முறையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவம் தபாலில் தொலைந்துவிட்டமை சம்பந்மாகவோ அல்லது தாமதமானவை பற்றியோ செய்யப்படும் முறைப்பாடுகள் எதுவும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

9.3 விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. அனுமதி அட்டை பரீட்சை நடைபெறுவதற்கு 7 நாட்களுக்கு முன் கிடைக்கப்பெறாவிடின், கீழ்க்குறிப்பிடப்படும் விபரங்களுடன் உடனடியாக கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ பணிப்பாளர் நாயகத்திற்கு அறியத்தருதல் வேண்டும் :-

(i) பரீட்சார்த்தியின் முழுப்பெயர்
(ii) முகவரி
(iii) விண்ணப்பப்படிவம் தபாலில் சேர்த்த திகதி, பதிவு இலக்கம், அஞ்சல் அலுவலகம்.

10. விண்ணப்பதாரி கீழ்க்குறிப்பிடப்படும் ஆவணங்களின் போட்டோ பிரதிகளை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்வித் தகைமை பற்றிய சான்றிதழ் ;
(iii) தொழில் தகைமை பற்றிய சான்றிதழ்.

**பரீட்சார்த்திகளின் கவனத்துக்கு**.- இந்தப் பரீட்சையில் அமரும் சகல விண்ணப்பதாரர்களும் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காக கீழ்க்குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) நபரொருவரைப் பதிவுசெய்யும் ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை

அல்லது

(ii) செல்லுபடியான வெளிநாட்டு பிரயாண கடவுச்சீட்டு (பரீட்சைத் திகதிக்கு 3 வருடங்களுக்கு முன் வழங்கப்பட்டது.)

**உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்கல்.**- இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக எவரேனுமொரு பரீட்சார்த்திக்குத் தகைமை இல்லை என பரீட்சைக்கு முன்பு அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சை முடிவடைந்த பின்னர் அல்லது எச்சந்தர்ப்பத்திலாவது தெரியவரின் அவரின் பரீட்சார்த்தித் தன்மை செல்லுபடியற்றதாக்கப்படும். பரீட்சார்த்தி ஒருவர் சமர்ப்பித்த ஏதேனும் தகவல்கள் தவறானது என்பதை அறிந்துகொண்டே சமர்ப்பித்ததாக தெரியவரின் அவர் சேவையிலிருந்து பணி நீக்கம் செய்யப்படுவார்.

11. இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்படாத யாதேனுமொரு விடயம் சம்பந்தமாக பிரச்சினை ஏற்படின், அதுபற்றி தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ பணிப்பாளர் நாயகத்துக்கு உரியது.

(கலாநிதி) அனில் பெரேரா,
கரையோரம் பேணல் மற்றும் கரையோர
மூலவள முகாமைத்துவ பணிப்பாளர் நாயகம்.

கரையோரம் பேணல் மற்றும் கரையோர
மூலவள முகாமைத்துவ திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
2012, பங்குனி 14.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு**

**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்**

*இலங்கை தொழில்நுட்ப சேவையின் II வகுப்பு “ஆ” தொகுதியின் பொறியியல் உதவியாளர் பதவிக்கு சேர்த்துக்கொள்ளல் - 2012*

☐
(அலுவலகப் பாவனைக்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 1
தமிழ் - 2
ஆங்கிலம் - 3 ☐
(உரிய இலக்கத்தை கூட்டுக்குள் எழுதவும்.)

1. பெயர் :

1.1 முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
உ-ம் : SILVA, A.B

1.2 முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் (தமிழில்) :----.

2. முகவரி :

2.1 சொந்த :----.

2.2 அலுவலக :----.

2.3 பரீட்சை அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி :----.

3. இலங்கைப் பிரசையா ? :----.

4. 4.1 பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

4.2 தேசிய அடையாள அட்டை இல. :

☐☐☐☐☐☐☐☐☐☐

5. 5.1 பால் : ஆண் ☐
பெண் ☐

5.2 விவாகமானவர் ☐
விவாகமாகாதவர் ☐
தாரமிழந்தவர் ☐

6. கல்வித் தகைமை :

6.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை :

வருடம் : பரீட்சை இல. :

| | பாடங்கள் | பெற்ற சித்தி |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |

| | பாடங்கள் | பெற்ற சித்தி |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |

6.2 க. பொ. த. (உ. த.) பரீட்சை :

வருடம் : பரீட்சை இல. :

| | பாடங்கள் | பெற்ற சித்தி |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

7. தொழில் தகைமைகள் :

| | தொழில் பயிற்சி பாடநெறி யாயின் | பயிற்சி நெறிக்காக கலந்து கொண்ட நிறுவனம் | பயிற்சி நெறியின் கால எல்லை | சித்தி |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 2 | | | | |
| 3 | | | | |
| 4 | | | | |

8. அனுபவம் :

| | தொழில் அனுபவம் | நிறுவனம் | கால எல்லை |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |

9. மொழி அறிவு சம்பந்தமான விபரம் :

| | மொழி | பேச்சு | எழுத்தறிவு | கதைக்கும் திறன் |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 2 | | | | |
| 3 | | | | |

10. கணனி இயலுமை சம்பந்தமான விபரம் :

| | சான்றிதழ் | சான்றிதழ் வழங்கிய நிறுவனத்தின் பெயர் | வருடம் | விடயம் |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 2 | | | | |

11. பரீட்சைக் கட்டணம் செலுத்திய அஞ்சல் அலுவலகத்தின் பெயர் : ----.

காசுக்கட்டளையின் இல. :----.

> மொத்த பரீட்சைக் கட்டணம் ரூபா 500 ஆகும். நாட்டின் எந்த அஞ்சல் அலுவலகத்திலும் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ பணிப்பாளர் நாயகத்தின் பெயரில், பணமாக்கக்கூடிய அலுவலகம் மாளிகாவத்தை (பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும்.)

இந்த விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவையும், சரியானவையும் என இத்தால் உறுதிகூறுகிறேன். இங்கு தரப்பட்ட விடயங்களில் ஏதேனும் பிழையானவை அல்லது பொய்யானவை என நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு தெரியவரின் நான் பதவிக்குத் தகுதியற்றவராகக் கருதப்படுவதற்கும், நியமனத்தின் பின்னராயின் எவ்வித நட்டஈடுமின்றி பதவி இழக்கச் செய்வதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் நன்கு அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

தற்பொழுது அரச சேவையில் பணிபுரியும் அலுவலர்களுக்கு மட்டும் ஏற்புடையதாகும்.

**திணைக்கள/ நிறுவனத் தலைவரின் சான்றிதழ்.**- இந்த அலுவலரினால் தரப்பட்ட தகவல்களை பரிசீலனை செய்தபோது, இவ்விபரங்கள் சரியானவை எனவும், இந்த அலுவலர் தெரிவுசெய்யப் படுமிடத்து தற்போது வகிக்கும் சேவையிலிருந்து விடுவிப்பு செய்ய முடியும்/முடியாது எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை பொறித்தல் வேண்டும்.)

பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

3-1081

---

## நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்

### நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர் சேவையின் நீதிமன்ற உரை பெயர்ப்பாளர் (தரம் II) இற்கு சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012

நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர் சேவையின் நீதிமன்ற உரைப் பெயர்ப்பாளர் சேவைக்குரிய II ஆம் தரத்திற்கு சிங்களம்/தமிழ் அல்லது சிங்களம்/ஆங்கிலம் அல்லது தமிழ்/ஆங்கிலம் உரைபெயர்ப் பாளர்களை சேர்த்துக்கொள்வதற்காக கீழ்க்குறிப்பிடப்படும் தகைமை களைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இப்பதவி நிரந்தரமானது ; ஓய்வூதிய கொடுப்பனவுக்குரியது.

3. **வேதனத்திட்டம்.**- மாதாந்தம் ரூ. 15,610-10X170-6X240-14X320-ரூபா 23,230 எனும் வேதனத்திட்டம் இப்பதவிக்கு உரியதாகும். இப்பதவியின் ஆரம்ப வேதனப்படி நிலை ரூ. 16,290 ஆகும்.

(**குறிப்பு.**- 6 ஆவது வேதன படிநிலைக்கு வருவதற்கு முன் பரீட்சையுடன் கூடிய I ஆவது வினைத்திறன் தடைகாண் தேர்வுக்கும் மற்றும் 13 ஆவது வேதன படிநிலைக்கு வருவதற்கு முன் பரீட்சையற்ற II ஆவது வினைத்திறன் தடைகாண் தேர்வுக்கும் தோற்ற வேண்டும்.

4. **வயது.**- விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்கு விண்ணப்பதாரிகள் 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். (அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர் களுக்கு உச்ச வயதெல்லை செல்லுபடியாகாது.)

5. **தகைமைகள்.**- விண்ணப்பதாரிகளுக்கு பின்வரும் தகைமைகள் இருத்தல் வேண்டும் :-

(I) கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) ஒரே தடவையில் 4 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். அல்லது கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சையில் (புதிய

பாடத்திட்டம்) ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(i) பரீட்சார்த்தி, சிங்கள மொழியில் தகைமைக்குரிய பரீட்சையில் சித்தியடைந்திருப்பின், பின்வரும் உப தகைமைகளில் ஆகக்குறைந்தது ஒன்றினையாவது கொண்டிருக்க வேண்டும் :-

(அ) ஆங்கில மொழியில் அல்லது ஆங்கில இலக்கியத்தில் அல்லது தமிழ் மொழியில் அல்லது தமிழ் இலக்கியத்தில் விசேட சித்தியுடன், இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் 6 பாடங்களுடன் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் அல்லது,

(ii) பரீட்சார்த்தி, தமிழ் மொழியில் தகைமைக்குரிய பரீட்சையில் சித்தியடைந்திருப்பின், பின்வரும் உப தகைமைகளில் ஆகக்குறைந்தது ஒன்றினையாவது கொண்டிருக்க வேண்டும் :-

(அ) சிங்கள மொழியில் அல்லது சிங்கள இலக்கியத்தில் அல்லது ஆங்கில மொழியில் அல்லது ஆங்கில இலக்கியத்தில் விசேட சித்தியுடன், இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் 6 பாடங்களுடன் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் அல்லது,

(iii) பரீட்சார்த்தி, ஆங்கில மொழியில் தகைமைக்குரிய பரீட்சையில் சித்தியடைந்திருப்பின், பின்வரும் உப தகைமைகளில் ஆகக்குறைந்தது ஒன்றினையாவது கொண்டிருக்க வேண்டும் :-

(அ) சிங்கள மொழியில் அல்லது சிங்கள இலக்கியத்தில் அல்லது தமிழ் மொழியில் அல்லது தமிழ் இலக்கியத்தில் விசேட சித்தியுடன், இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் 6 பாடங்களுடன் கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல்.

6. உரிய தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் கீழ்க்குறிப்பிடப்படும் பாடப் பரப்பிற்குட்பட்ட எழுத்துமூல பரீட்சைக்கு தோற்ற வேண்டும். அப்பரீட்சைப் பெறுபேற்றுக்கமைவாக உரிய புள்ளி மட்டத்திற்கு மேல் புள்ளிகளைப் பெறுகின்றவர்கள் நேர்முகத் தேர்வின் பின்னர் இப்பதவிக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

(I) **பாடத்திட்டம்**.- மொழி (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) இலக்கியம் அல்லது பொது விடயங்கள் தொடர்பான கட்டுரை, சுருக்கம் எழுதுதல் அல்லது விளங்கிக்கொள்ளல் தொடர்பான வேறு பரீட்சிப்பு, சொல்லகராதி தொடர்பான வினாக்கள், மரபுத் தொடர்கள் மற்றும் அதன் பாவனை மற்றும் பிழைதிருத்தம் செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கும். (இவ்வினாப்பத்திரம் கல்விப் பொதுத்தராதர (உயர் தர) ப் பரீட்சையின் தரத்திற்கு ஒத்ததாயிருக்கும்.)

(II) **மொழிபெயர்ப்பு**.- இவ்விடயப்பரப்பு மூன்று வினாப் பத்திரங்களை கொண்டிருக்கும் :

(i) சிங்கள மொழியினை, தமிழ் மொழிக்கு அல்லது ஆங்கில மொழிக்கு மொழிபெயர்த்தல்

(ii) தமிழ் மொழியினை, சிங்கள மொழிக்கு அல்லது ஆங்கில மொழிக்கு மொழிபெயர்த்தல்

(iii) ஆங்கில மொழியினை, சிங்கள மொழிக்கு அல்லது தமிழ் மொழிக்கு மொழிபெயர்த்தல்

(பரீட்சார்த்திகள், இலக்கிய உரைப்பகுதி, பொது விடயங்கள் தொடர்பான உரைப்பகுதி, உத்தியோகபூர்வ அறிக்கையில் அல்லது ஆவணத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட உரைப்பகுதி, பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஆக்கம் அல்லது அறிக்கையொன்றினை மொழி பெயர்ப்புச் செய்தல் வேண்டும்.)

பரீட்சார்த்திகள் தமது தகைமைக்கு ஏற்ப மேலே குறிப்பிட்ட 6 (i) மொழி வினாப்பத்திரத்திற்கும் 6 (ii) மொழிபெயர்ப்பு வினாப் பத்திரங்கள் இரண்டுக்கும் கட்டாயமாக பதிலளிக்க வேண்டும். மொழிபெயர்ப்பு வினாப்பத்திரங்கள் இரண்டினை தெரிவுசெய்யும் போது மேலுள்ள 1 ஆம் பந்திக்கு அமைவாக பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்கும் பதவிக்குரிய மொழிகள் இரண்டினை ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மொழிமாற்றம் செய்யக் கூடிய வகையில் தெரிவுசெய்ய வேண்டும். இதைத் தவிர மும்மொழி தேர்ச்சியுடைய பரீட்சார்த்திகளுக்கு மூன்றாவது வினாப்பத்திரத்திற்கும் தோற்ற முடியும். ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் கால எல்லையாக இரண்டு மணித்தியாலங்கள் வழங்கப்படும்.

**குறிப்பு**.- விடைத்தாள்களில் காணப்படும் தெளிவின்மை, எழுத்துப் பிழை என்பவற்றுக்கு புள்ளிகள் குறைக்கப்படும் என்பதை கவனத்திற் கொள்ளவும்.

7. சேவையில் உள்வாங்கப்படும் விண்ணப்பதாரிகள் இலங்கைத் தீவின் எப்பாகத்திற்கும் சென்று சேவையாற்ற தயாராக இருக்க வேண்டும்.

8. இவ்வறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக மாத்திரமே விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை பூர்த்திசெய்து அனுப்ப வேண்டும். இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது நிர்வாக நடவடிக்கைகளுக்காக மீளளிக்கப்படாத ரூ. 500 இனை நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகத்தின் செயலாளரின் பெயரில் மக்கள் வங்கியின் 'டாம்' வீதி கிளையின் 297100199025039 கணக்கில் வைப்பிலிட்டு பெற்ற வைப்புச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டினுள் ஒட்டவும்.

9. விண்ணப்பப்படிவங்கள் 2012.04.30 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கும் வகையில் "செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம், கொழும்பு 12" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தை கொண்ட கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். அரச சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பப்படிவங்கள் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்பப்பட வேண்டும்.

10. விண்ணப்பப்படிவங்கள் தொடர்பாக எழும் சிக்கல்கள் அனைத்திற்கும் நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

எஸ். என். கொபல்லவ,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு 12,
2012, பங்குனி 15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர் சேவையின் நீதிமன்ற உரைப் பெயர்ப்பாளர் (தரம் II) இற்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012**

(**கவனிக்க.-** விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படும் விடயங்கள் உண்மையாகவும், தெளிவாகவும் விண்ணப்பதாரியின் கையெழுத்தி னால் நிரப்பப்படல் வேண்டும். இலக்கம் 1 இலிருந்து 11 வரை முதல் பக்கத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். உரிய கூட்டினுள் உரிய இலக்கத் தைக் குறிப்பிடவும்.)

சுட்டெண் :
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :----.
   (ii) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் (தெளிவாக ஆங்கிலத்தில் எழுதவும்) :----.

2. பால் : (பெண்-1, ஆண்-2) :----. ☐

3. நிரந்தர முகவரி :----.

4. அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி :----.

5. வசிக்கும் மாவட்டம் :----.

6. தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

7. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

8. (அ) பிறந்த திகதி :----.

   (ஆ) விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கும் இறுதித் திகதி யன்று வயது :

   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

9. விண்ணப்பிக்கும் உரைபெயர்ப்பாளர் பதவி :

   (1) சிங்களம் - தமிழ்
   (2) சிங்களம் - ஆங்கிலம்
   (3) தமிழ் - ஆங்கிலம் ☐

10. தோற்றுவதற்கு உத்தேசிக்கும் வினாப்பத்திரம் :

   (i) (1) சிங்களம்
       (2) தமிழ்
       (3) ஆங்கிலம் ☐

   (ii) உரைபெயர்ப்பு,
       (1) சிங்கள மொழியை, தமிழ் மொழிக்கு அல்லது ஆங்கில மொழிக்கு மொழி பெயர்த்தல் ☐
       (2) தமிழ் மொழியை, சிங்கள மொழிக்கு அல்லது ஆங்கில மொழிக்கு மொழி பெயர்த்தல் ☐
       (3) ஆங்கில மொழியை, சிங்கள மொழிக்கு அல்லது தமிழ் மொழிக்கு மொழி பெயர்த்தல் ☐

   (iii) மூன்றாவது வினாப்பத்திரம் ☐
   (இவ்வினாப்பத்திரத்திற்கு தோற்றுவதாயின் இலக்கத்தை குறிப்பிடவும்.)

11. அரச சேவையில் பணியாற்றுபவரெனின்,

   (i) அமைச்சு/திணைக்களம்/நீதிமன்றம் :----.
   (ii) தற்போது வகிக்கும் பதவி :----.
   (iii) அப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :----.
   (iv) அப்பதவி நிரந்தரமாக்கப்பட்ட திகதி மற்றும் கடித இலக்கம் :----.
   (v) அலுவலக முகவரி :----.

12. (அ) அறிவுறுத்தல் படிவத்திலுள்ள 5 ஆவது பந்தியின், எவ் இலக்கத்தின்கீழ் நீர் தகைமை பெறுகின்றீர் என்பதைக் குறிப்பிடவும் :----.

   (ஆ) கல்வித் தகைமைகள் :
   (ஒவ்வொரு பரீட்சையினதும் பெறுபேறுகளை சுட்டெண் களுடன் வேறு வேறாக குறிப்பிடவும்.)
   பிரதான தகைமை.- கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சைப் பெறுபேறு :

   வருடம் :----. சுட்டெண் :----.

| இல. | விடயங்கள் | தரம் |
|---|---|---|
| | | |

   (இ) க.பொ.த. (சா. த.) பரீட்சைப் பெறுபேறு :

   வருடம் :----. சுட்டெண் :----.

| இல. | விடயங்கள் | தரம் |
|---|---|---|
| | | |

   வருடம் :----. சுட்டெண் :----.

| இல. | விடயங்கள் | தரம் |
|---|---|---|
| | | |

குறிப்பு.- சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி விண்ணப்பதாரியினால் உரிய தொகையினை வைப்பிலிட்டு பெற்ற வைப்புச்சீட்டினை அகற்றக்கூடிய விதத்தில் இங்கே ஒட்டவும் :

☐

மேற்குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தும் உண்மையானவை எனவும், இப்பரீட்சைக்காக விதிக்கப்பட்டுள்ள சட்டங்களை பின்பற்றுவதற்கு சம்மதிக்கின்றேன் எனவும் உறுதிகூறுகின்றேன். மேற்குறிப்பிட்ட விடயங்களில் யாதேனும் ஓர் தகவல் உண்மைக்குப் புறம்பானது அல்லது பிழையானது என நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன் தெரியவருமா யின் அக்காரணத்திற்காக நான் இப்பதவிக்கு தகைமையற்றிருப்பதற்கும், இப்பதவிக்கு நியமனம்பெற்ற பின் அத்தவறு தெரியவருமாயின் எவ்வித நட்டவீடும் வழங்கப்படாமல் சேவையிலிருந்து நீக்கப்படலாம் என்பதனை யும் நன்கறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

***திணைக்களத் தலைவரின் சான்றிதழ்***

*மேலே பெயர் குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரி இவ் அமைச்சில்/ திணைக்களத்தில்/ நீதிமன்றத்தில் பணிபுரிவதுடன் அவரினால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும், மேற்குறிப்பிட்ட பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரை விடுகை செய்ய முடியும்/முடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*----,*
*திணைக்களத் தலைவரின்*
*கையொப்பம்.*

*பெயர் :----.*
*உத்தியோகபூர்வ இலச்சினை :----.*
*திகதி :----.*

*3-1128*

---

***காணி, காணி அபிவிருத்தி அமைச்சு***

இலங்கை நிலஅளவைத் திணைக்களம்

***நில அளவையாளர் நாயகத்தின் உத்தரவு பெற்ற படவரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை - 2012***

நில அளவையாளர் நாயகத்தால், உத்தரவு பெற்ற படவரைஞராக தொழில் புரிவதற்கான சான்றிதழ் வழங்குவதற்கான பரீட்சை கொழும்பில் நடைபெறும். இப் பரீட்சை இரண்டு பகுதிகளாக நடாத்தப்படும்.-

பகுதி I - ஆள்கூற்றுப் பத்திரம் தயாரித்தல்
பகுதி II - படம் வரைதல்

2. முதலாவது பகுதிப் பரீட்சை 2012 ஆம் ஆண்டு ஆடி மாதம் 21 ஆந் திகதியும், இரண்டாவது பகுதிப் பரீட்சை 2012 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 20 மற்றும் 21 ஆந் திகதிகளிலும் நடைபெறும். முதற் பகுதிப் பரீட்சையில் சித்தியடையாத பரீட்சார்த்திகள் இரண்டாவது பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள். சான்றிதழ் வழங்குவதற்கான தகுதியைப் பெறுவதற்கு பரீட்சார்த்திகள் ஒரே தடவையில், பகுதி I மற்றும் பகுதி II ஆகிய இரு பரீட்சைகளிலும் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

3. பரீட்சார்த்திகள் பின்வருவனவற்றைச் செய்ய முடியுமென்பதில் என்னைத் திருப்திப்படுத்த வேண்டும் :-

(அ) புலக் குறிப்பிலிருந்து ஆள்கூற்றுத் தாள் ஒன்றைச் சரியாக தயார் செய்து அளவைப் போகு ஒன்றின் ஆள்கூறுகளைக் கணித்தல்.

4. பரீட்சைக்கான விண்ணப்பங்களை கீழ்த்தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பபடிவத்திற்கமைய தயாரித்து, பரீட்சைக் கட்டணமாக ரூபா 300.00 பெறுமதியான காசுக் கட்டளையுடன் அல்லது அளவையியல் படமாக்கல் நிறுவனம், தியத்தலாவையில் பணமாக செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டுடன் பதிவுத் தபால் மூலம் "சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகர் (பரீட்சை), அளவையியல் படமாக்கல் நிறுவனம், தியத்தலாவை" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். காசுக்கட்டளைகள் " சிரேஷ்ட பிரதி நிலஅளவையாளர் நாயகம் (நிலஅளவைப் பயிற்சி நிறுவனம்), அளவையியல் படமாக்கல் நிறுவனம், தியத்தலாவை" என்னும் பெயரில் எடுக்கப்படல் வேண்டும். கட்டணத்தை, பணம் மூலம் செலுத்துவதானால் அளவையியல் படமாக்கல் நிறுவனம், தியத்தலாவையில் செலுத்தலாம். அப்படி பெறப்பட்ட மூலப் பற்றுச்சீட்டை அல்லது காசுக்கட்டளையின் மூலப் பிரதியை விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கவும். (தயவு செய்து அவற்றை விண்ணப்பப்படிவத்தில் ஒட்ட வேண்டாம்.) தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "நில அளவையாளர் நாயகத்தின் உத்தரவு பெற்ற படவரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை- 2012" என எழுதப்பட வேண்டும். பரீட்சைக் கட்டணம் முத்திரை களாகவோ அல்லது காசோலைகளாகவோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

5. எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது.

6. 2012 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 25 ஆந் திகதிக்குப் பின்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. வரைபுத்தாள்களும் ஆள் கூற்றுத்தாள்களும் பரீட்சை மண்டபத்தில் வழங்கப்படும். எவ்வாறாயினும் வரைதல் உபகரணங்கள், ஆள் கூறுகளைக் கணிக்க உதவும் கணிதவாய்ப்பாடுகள் மற்றும் விண்ணப்பதாரிகளுக்கு வேண்டிய உபகரணங்கள் யாவற்றையும் அவர்களே கொண்டுவருதல் வேண்டும். பரீட்சை மண்டப மேற்பார்வை யாளரின் அனுமதியுடன் சாதாரண கணிப் பொறிகள் (Non programmable Scientific Calculators) பாவிக்க அனுமதிக்கப்படும்.

8. (i) பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தில் மேற்பார்வையாளரைத் திருப்திப்படுத்துமளவுக்கு தனது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு ஆவணத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் தனது ஆள் அடையாளத்தை நிரூபிக்கலாம் :-

(அ) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை ;

(ஆ) ஒரு செல்லுபடியான கடவுச் சீட்டு ;

(இ) ஒரு அரசாங்கத் திணைக்களத்தின் அதிகாரத்துடன் பரீட்சார்த்திக்கு பரீட்சை தினத்திலிருந்து மூன்று வருடங்களுக் குள் வழங்கப்பட்டதும், வைத்திருப்பவரின் நிழற் படத்தை கொண்டதுமான ஏதாவதொரு சான்றிதழ் அல்லது உத்தரவுச் சீட்டு.

(ii) பந்தி 8(i) வேண்டப்பட்ட ஆளடையாளத்தை நிரூபிக்க இயலாத எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்.

9. இப்பரீட்சை மெற்றிக் முறையில் நடத்தப்படும்.

எஸ்.எம்.டபிள்யு.பர்னாந்து
நில அளவையாளர் நாயகம்,

நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,
த .பெ. இல. 506,
கிருல வீதி,
கொழும்பு 05,
2012.03.15.

மாதிரி விண்ணப்பப் படிவம்

***இலங்கை நில அளவைத் திணைக்களம்***

*நில அளவையாளர் நாயகத்தின் உத்தரவு பெற்ற படவரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை-2012*

சுட்டிலக்கம் : [ ]
(அலுவலகப் பாவனைக்கு)

(அ) (i) முதலெழுத்துக்களுடன் பெயர்:- திரு/திருமதி/செல்வி : ----.
(ii) முதலெழுத்தைக் குறிக்கும் பெயர் :----.
(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்): Mr./Mrs./Miss :----.

(ஆ) பால் :----.

(இ) பதவி :----.

(ஈ) தொழில் பார்க்குமிட முகவரி :----.

(உ) நிரந்தர முகவரி :----.

(ஊ) பிறந்த திகதி :----.

(எ) கல்வித் தகைமைகள் :----.

(ஏ) பரீட்சார்த்தி இப்பரீட்சைக்கு தோற்ற உத்தேசித்திருக்கும் மொழி (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்)

(ஐ) செலுத்திய கட்டணம் : ரூபா :----.

(ஒ) காசுக் கட்டளை இலக்கம் / பற்றுச் சீட்டிலக்கம் :----.
வழங்கிய அலுவலகம் :----.
திகதி :----.

(தியத்தலாவ அளவையியல் படமாக்கல் நிறுவனத்தில் செலுத்தப் பட்டிருப்பின் பற்றுச் சீட்டின் மூலப் பிரதியை அல்லது காசுக் கட்டளை மூலம் செலுத்தப்பட்டிருப்பின் அதன் மூலப்பிரதியை இணைக்கவும்).

மேற்கூறிய விபரங்கள் யாவும் சரியானதென்றும், உண்மையான தென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

3-1133